SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் III பரீட்சை – ஜூலை 2025

**(Level III Examination – July 2025)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள˙ கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் III பரீட்சை – ஜூலை 2025

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(மொத்தம் 20 புள்ளிகள்)** **பகுதி - A**

### *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 01***

**(a)**

- அதிகரித்த வெளிப்படைத்தன்மை
- அதிகரித்த பொறுப்புக்கூறல்
- தொழிற்பாட்டு வினைத்திறன்கள்
- சிறந்த இடர்-பதிலிறுக்கை இயலுமைகள்
- தவறாக முகாமை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு
- சிறந்த தீர்மானம் மேற்கொள்ளல்
- நெறிமுறை நடத்தையை ஊக்குவித்தல்
- நற்பெயரை அதிகரித்தல்
- பங்கு விலையில் நேர்க்கணியத் தாக்கம்
- ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே நம்பிக்கையை வளர்த்தல்.

*(மூன்று நன்மைகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, பட்டியலிடப்பட்ட உரிமத்தின் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல், முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மையை மேற்பார்வை செய்தல்.
2. நிதி அறிக்கையிடல் தொடர்பான விதிமுறைகள் மற்றும் தேவைப்பாடுகள், கம்பனி சட்டத்தின் தகவல் தேவைப்பாடுகள் மற்றும் பிற தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் தேவைப்பாடுகளுடனான உரிமத்தின் இணக்கப்பாட்டை மேற்பார்வை செய்தல்.
3. நிறுவனத்தின் அகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமை நடைமுறைகள் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இருப்பதை உறுதிசெய்யும் செயன்முறையை மேற்பார்வை செய்தல்.
4. நிறுவனத்தின் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயற்திறனை மதிப்பீடு செய்தல்.
5. வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் நியமனம், மீள்நியமனம் மற்றும் நீக்கம் குறித்து சபைக்கு பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் ஊதியம் மற்றும் பணிக்கமர்த்தல் விதிமுறைகளை அங்கீகரித்தல்.

*(இரண்டு செயற்பாடுகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

***(02 புள்ளிகள்) (மொத்தம் 05 புள்ளிகள்)***

SRI LANKA

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 09***

**(a)** நிறுவனமும் அதன் ஊழியர்களும் தொடர்புடைய நெறிமுறைத் தேவைகளுக்கு இணங்குகிறார்கள் என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாட்டை வழங்க வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவனம் நிறுவ வேண்டும், அவற்றில் பின்வருவன உள்ளடங்கும்:

(a) நாணயத்தன்மை
(b) புறநிலை (பக்கச்சார்பின்மை)
(c) தொழில்சார் திறன் மற்றும் போதிய கவனம்
(d) இரகசியத்தன்மை
(e) தொழில்சார் நடத்தை

*(03 புள்ளிகள்)*

**(b)**

- தொழில்சார் கல்வி
- பயிற்சியளித்தல் உள்ளடங்கலான, தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி
- பணி அனுபவம்
- அதிக அனுபவம் வாய்ந்த ஊழியர்களால் பயிற்சியிக்கப்படல்
- சுயாதீனத்தின் அவசியம் பற்றி ஊழியர்களுக்கான சுதந்திரக் கல்வி

*(இரண்டு வழிகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

*(02 புள்ளிகள்)*

*(05 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 08 மற்றும் 04**

**(a)**

(1) **சுயாதீனம் மற்றும் அக்கறை முரண்பாடு (நெறிமுறைசார்ந்த கருத்திற்கொள்ளல்)**
கணக்காய்வு நிறுவனம் ஏற்கனவே ரிலையன்ஸ் கட்டுமான நிறுவனத்தின் வெளிவாரிக் கணக்காய்வாளராக பணியாற்றி வருவதால், குறிப்பாக நிறுவனங்களுக்கு இடையேயான பரிவர்த்தனைகள் அல்லது ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் சம்பந்தப்பட்டிருந்தால், தாய் நிறுவனத்திற்கு, சுய மீளாய்வு அச்சுறுத்தல் மற்றும் அக்கறை முரண்பாடு ஏற்படும் இடர் உள்ளது. பக்கச்சார்பின்மை மற்றும் சுயாதீனத்தன்மையைப் பேணப் போதுமான பாதுகாப்புகள் (தனியான பணிக்கமர்த்தல் அணிகள் போன்றவை) செயற்படுத்தப்பட முடியுமா என்பதை கணக்காய்வாளர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

(2) **கணக்காய்வை நிறைவேற்றுவதற்கான திறன்கள் மற்றும் வளங்கள் (நடைமுறை சார்ந்த கருத்திற்கொள்ளல்)**
கணக்காய்வு நிறுவனம் குறிப்பாக சூரியசக்தி துறையில் ஒழுங்குமுறை இணக்கப்பாடு (உ-ம்., இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபைத் தேவைப்பாடுகளுடன்) மற்றும் பகுதி அல்லது பெருமளவில் முடிக்கப்பட்ட சூரிய மின் திட்டங்களிலிருந்தான வருமான ஏற்பிசைவு ஆகியவை உள்ளடங்கலானவை தொடர்பில் தேவையான தொழிற்திறன் நிபுணத்துவம் மற்றும் தொழில் அறிவைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**(3) வணிகத்தையும் அதன் சூழலையும் புரிந்துகொள்ளல்**

சேவைபெறுனரின் வணிகம், தொழில் மற்றும் ஒழுங்குமுறை சூழலைப் பற்றிய முழுமையான புரிதலைப் பெறுதல் வேண்டும்.

**(4) நிறுவனத்தின் நிதி நிலைத்தன்மை மற்றும் நற்பெயர்.**

சந்தையில் வாடிக்கையாளரின் நிலைத்தன்மை மற்றும் நற்பெயரை உறுதி செய்தல்.

**(5) சட்டரீதியான தேவைகளுக்கு இணக்கமின்மை இடர்:**

இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையில் பதிவு செய்யத் தவறுவது நிறுவனத்தின் மீது சட்டரீதியான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும், ஏனெனில் அடையாளம் காணப்பட்ட விடயம் இணக்கமின்மையாகவுள்ளது. தொடர்ந்து செயற்பட வேண்டாம் என்று ஆணையம் உத்தரவிடக்கூடும் என்பதால், இந்த விடயத்தில் ஏற்படும் தாக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடுவதுடன், தொடர்ந்தியங்கும் தன்மை ஒரு முக்கிய கருத்திற்கொள்ளலாக இருக்கும் என்பதால், இந்த சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்.

*(இரண்டு அம்சங்களை மட்டும் எதிர்பார்க்கலாம்)*
***(03 புள்ளிகள்)***

**(b)**

- நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு.
- விசேட நோக்க நிதிக்கூற்றுக்கள் மீதான உறுதிப்பாடு.
- அகக் கட்டுப்பாட்டின் போதுமான தன்மை குறித்த உறுதிப்பாடு.
- சுற்றுச்சூழல் விடயங்கள் தொடர்பான உறுதிப்பாடு.
- ஒழுங்குமுறை இணக்கங்கள் மீதான உறுதிப்பாடு.
- முறைமை நம்பகத்தன்மை அறிக்கைகள்.
- ஒருங்கிணைந்த அறிக்கையிடல் மீதான உறுதிப்பாடு.
- நிலைபேறானதன்மை அறிக்கையிடல் தொடர்பான உறுதிப்பாடு.

*(இரண்டு உதாரணங்களை மட்டும் எதிர்பார்க்கலாம்)*
***(02 புள்ளிகள்)***
SRI LANKA
***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| **அத்தியாயம் 02** |
|---|

**(a)**

வாடிக்கையாளர் சேவை, உற்பத்தித் தரம் அல்லது சேவை வழங்கல் சிக்கல்கள் குறித்த சரியான நேரத்தில் நுண்ணறிவுகளைச் சேகரிக்க, Shopping.lk இப்போது சமூக ஊடக உள்ளடக்கத்தை (WhatsApp, Facebook, TikTok போன்றவை) தீவிரமாகக் கண்காணிக்க முடியும். இந்த விடயத்தில், பரவலாகவும் உடனடியாகவும் கிடைக்கும் சமூக ஊடக உள்ளடக்கம் வணிகத்தின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் குறித்த பொதுமக்களின் பின்னூட்டங்களைப் பற்றிய பெறுமதிமிக்க நுண்ணறிவுகளை வழங்குவதுடன், சேவை மற்றும் உற்பத்தி தரச் சிக்கல்களை கடுமையான உற்பத்திக்குறி அல்லது அங்கீகார வணிகம் தீங்கிற்கு இட்டுச் செல்வதற்கு முன்பு விரைவாகத் தீர்க்கக்கூடிய ஒரு முகாமைக் கருவியை வழங்குவதன் மூலம் Shopping.lk நற்பெயருக்கு ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க உதவுகிறது.

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. இடர் தவிர்ப்பு
2. இடர் ஏற்பு
3. இடர் மாற்றல்
4. இடர் குறைப்பு
5. இடர் பகிர்வு

*(இரண்டு மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது)*
***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 05 புள்ளிகள்)***

SRI LANKA

**பகுதி A முடிவு**

| (மொத்தம் 30 புள்ளிகள்) | பகுதி - B |
|---|---|

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 மற்றும் 06***

**(a)**

1. **மொத்த இலாப விகிதம்**: விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக மொத்த இலாப விகிதம் 30% இலிருந்து 27% ஆகக் குறைந்துள்ளது.
2. **விற்பனை முரண்**: 2025 இல் விற்பனை 10% வீழ்ச்சியடைந்துள்ளது. இது கணிசமான வீழ்ச்சி என்பதால், இந்த விற்பனைகள் உண்மையில் நடந்ததா என்பதை உறுதிப்படுத்த துணை ஆவணங்களுடன் சரிபார்க்கப்படுவதுடன், மேலும் அளவு சார்ந்த கணக்கிணக்கத்துடன் சரிபார்க்கப்பட வேண்டும்.
3. **இருப்பு மதிப்பீடு**: நிதிக்கூற்றுக்களில் இருப்பு பங்கு மிகைப்பெறுமதியிடப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது இது கவனிக்கப்பட வேண்டும்.
4. **கணக்காய்வு சான்றுகள் கிடைக்காமை**: சில விற்பனைப்பட்டியல்கள் நிறுவனத்தில் கிடைக்கவில்லை.
5. சேவை பெறுனரின் வணிகம், நிறுவனம் அல்லது கணக்கியல் முறைமையிலான முக்கிய மாற்றங்கள்.
6. சட்டம், கணக்கீட்டு நியமங்கள் அல்லது நிறுவனத்தின் நடைமுறைகளிலான மாற்றங்கள்.
7. பிற தொடர்புடைய பின்னணி தகவல்கள்.
8. முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் முன்கொண்டுவரப்பட்ட பிற விடயங்கள்.
9. தற்போதைய வரி நிலை.
10. நேரம் மற்றும் கிரயப் பாதீடுகள் மற்றும் ஊழியர் திட்டங்கள்.
11. சேவை பெறுனரிடமிருந்தான கால அட்டவணை மற்றும் கணக்கியல் சார்ந்த உதவி.
12. ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயம்.
13. அகக் கட்டுப்பாட்டை மற்றும் கட்டுப்பாடுகளை நம்பியிருக்கும் அளவைக் குறிப்பிட்டு, பகுப்பாய்வு நடைமுறைகள் மற்றும் வலுவளித்தல் சோதனைகள் மற்றும் முக்கிய வலுவளிப்பு நடைமுறைகளுக்கான அண்ணளவான மாதிரி அளவுகளை வழங்கும் ஒவ்வொரு முக்கிய பகுதிக்கும் விரிவான கணக்காய்வு அணுகுமுறை.

*(மூன்று விடயங்களை மட்டும் எதிர்பார்க்கலாம்)*

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. இருப்புகளின் பௌதீக எண்ணல் சரிபார்ப்பை அவதானித்தல்.
2. வேட்டுக்குறுக்கல் பகுப்பாய்வு
3. இருப்புக்களின் மதிப்பீட்டைச் சரிபார்த்தல்.
4. முறைமையின் இருப்புடன் பௌதீக இருப்பைச் சரிபார்த்தல்.
5. இருப்பு வைத்தல் காலத்தைக் கணக்கிடல்.
6. விற்பனை விலைப்பட்டியல்களைச் சரிபார்த்தல்.
7. இருப்புக்கள் தொடர்பில் சரியான கணக்கியல் நடைமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதா எனச் சரிபார்த்தல்.

*(நான்கு கணக்காய்வு நடைமுறைகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

***(04 புள்ளிகள்)***

**(c)** இதன் மூலம் அனைத்து மாதிரி அலகுகளும் கணக்காய்வாளருக்கு முழுமையான குடிலத்தைப் பற்றிய தீர்மானங்களை மெற்கொள்ள ஒரு நியாயமான அடிப்படையை

வழங்குவதற்கான தேர்வுக்கான வாய்ப்பைக் கொண்டுள்ள வகையில், கணக்காய்வு தொடர்புபட்ட குடிலத்திலுள்ள 100% க்கும் குறைவான உருப்படிகளுக்கு கணக்காய்வு நடைமுறைகளைப் பயன்படுத்துதல்.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 07**

**(a)**

மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான SJ லங்கா கன்ஸ்ட்ரக்ஸன் (பிரைவேட்) லிமிடெட்டின் கணக்காய்வுக் கருத்திற்கொள்ளலில் அடையாளம் காணப்பட்ட விடயங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு, ஒவ்வொரு விடயத்தையும் நாம் பின்வருமாறு பகுப்பாய்வு செய்ய வேண்டும்:

1. **பொருண்மை –** பிறழ்கூற்று அல்லது வரையறை பொருண்மையானதா.
2. **பாரதூரமான தன்மை** - இது நிதிக்கூற்றுக்களின் பல கூறுகளில் தாக்கம் செலுத்துகிறதா அல்லது ஒட்டுமொத்த நிதி அறிக்கைகளை பாதிக்கிறதா.
3. **சிக்கலின் தன்மை** - இது ஒரு பிறழ்கூற்றா அல்லது நோக்கெல்லை மீதான வரையறையாக உள்ளதா.

**விடயம் 1: ரூ. 8 மில்லியன் பெறுமதியான இருப்பை உறுதிசெய்ய முடியாமை**

- **தன்மை: கணக்காய்வு நோக்கெல்லை மீதான வரையறை** - துணை ஆவணங்கள் எதுவுமில்லை அல்லது இருப்பின் பௌதீக உறுதிப்படுத்தல் இடம்பெறவில்லை. அத்துடன், மாற்று நடைமுறைகள் சாத்தியமில்லை.
- **பொருண்மை:** ரூ. 8 மில்லியன் என்பது ரூ. 2.5 மில்லியன் என்னும் பொருண்மை எல்லையை விட உயர்வாக உள்ளது, அதாவது அது பொருண்மையானதாகும்.
- **பாரதூரமான தன்மை:**
  - இருப்பு என்பது நடைமுறைச் சொத்துக்களின் கணிசமான அங்கமாகும்.
  - ஒரு பொருண்மையான உருப்படி தொடர்பாக போதுமான பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை கணக்காய்வாளரால் பெற முடியாதிருக்க, அது பல பகுதிகளை (உ-ம்., விற்பனைக் கிரயம், இலாபம்) பாதிக்கும் சாத்தியம் இருந்தால், அது பாரதூரமானதாகக் கருதப்படலாம்.

**முடிவு:** இது பின்வரும் இரண்டிற்கும் வழிவகுக்கும்:

- **நோக்கெல்லை மீதான வரையறை** பாரதூரமானதாக இல்லாவிட்டால், ஒரு **முனைப்பழியான அபிப்பிராயம்**, அல்லது
- வயைறை **பொருண்மையானதாகவும் பாரதூரமானதாகவும்** இருந்தால் ஒரு **அபிப்பிராய மறுப்பு.**

**விடயம் 2: வட்டிச் செலவுக்கான கணக்கீட்டில் பிறழ்கூற்று (ரூ. 2.45 மில்லியன்)**

- **இயல்பு: பிறழ்கூற்று** - வகைப்படுத்தல் வழு: வட்டி மூலதனமாக்கப்பட்டிருக்க வேண்டும் (LKAS 23 இன் படி) ஆனால் அதற்கு பதிலாக செலவாகப் பதிவிடப்பட்டது.
- **பொருண்மை:** ரூ. 2.45 மில்லியன் என்பது ரூ. 2.5 மில்லியன் ஆகிய பொருண்மை வரம்பிற்கு அருகில் உள்ளது, எனவே அது இன்னமும் பொருண்மைமிக்கதாகவே கருதப்படும்.
- **பாரதூரமான தன்மை**: இது வரிக்கு முந்தைய இலாபம், நிதிச் செலவு மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (மூலதனக் குறைவேலை) ஆகியவற்றைப் பாதிக்கிறது,

ஆனால் நிதிக்கூற்றுக்கள் முழுவதும் பரந்ததாக இல்லை. **முடிவு:** இது பொருண்மைமிக்க பிறழ்கூற்று காரணமாக ஒரு முனைப்பழியான அபிப்பிராயத்தினை விளைவாகத்தரும்.

*(06 புள்ளிகள்)*

**(b)**

1. நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது வழு காரணமான பிறழ்கூற்றுக்களிலிருந்து முழுமையான அடிப்படையில் விடுபட்டுள்ளனவா என்பது குறித்து நியாயமான உறுதிப்பாட்டினைப் ெற்றுக்கொள்ளல்.

2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அறிக்கையிடுதல் மற்றும் கணக்காய்வாளரின் கண்டறிதல்களுக்கு ஏற்ப இலங்கைக் கணக்காய்வு நியமங்களினால் தேவைப்படுத்தப்படும் விடயங்களைத் தொடர்பாடல் செய்தல்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

*அத்தியாயம் 08*

**(a)**

1. **சுய-அக்கறை அச்சுறுத்தல்**
   - **விளக்கம்:** WA அசோசியேட்ஸ் அகக் கணக்காய்வை மேற்கொள்ளும் RF ஹோட்டல் (பிரைவேட்) லிமிடெட்) என்னும் தமது சேவை பெறுனரின் பொது முகாமையாளர் (விராஜ்) மூலம் உருவான வணிக உறவிலிருந்து (சுற்றுலா போக்குவரத்து சேவைகள்) குமார நிதி ரீதியாக பயனடைகிறார். இந்த விடயத்தில் விராஜ் கணக்காய்வுக் கட்டணங்களை 40% என்னும் கணிசமான தொகையினால் அதிகரிக்க முன்மொழிந்துள்ளார். ஆனால் அது இரு தரப்பினராலும் பகுத்தறிவுடன் இணங்கப்பட்டால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.
   - **நெறிமுறை தாக்கம்**: குமார தனது வெளிவாரி வருமான மூலத்தைப் பாதுகாக்க வாடிக்கையாளரின் முகாமைக்கு சாதகமாக இருக்கக்கூடும ஆகையால், இது பக்கச்சார்பின்மை மற்றும் தொழில்சார்தீர்ப்பை பாதிக்கத்தக்க நேரடி நிதி அக்கறையை உருவாக்குகிறது.
2. **பரிச்சயத்தன்மை அச்சுறுத்தல்**
   - **விளக்கம்:** குமார விராஜுடன் நெருங்கிய தனிப்பட்ட மற்றும் தொழில்சார்உறவை வளர்த்துக் கொண்டுள்ளார். குமார அகக் கணக்காய்வுக் குழுவின் ஒரு பகுதியாக இருப்பதாலும், இந்த தொடர்புக்குப் பிறகு கட்டணங்கள் 40% அதிகரிக்கப்பட்டதாலும், அவர் விராஜின் நலன்களுக்கு அதிகமாக அனுதாபம் காட்டக்கூடும். மேலும் இந்த சூழ்நிலையில் WA அசோசியேட்ஸ் கடந்த ஏழு ஆண்டுகளாக அகக் கணக்காய்வாளராக உள்ளார். எனவே வேலை மிகவும் பரிச்சயமானதாக இருக்கக்கூடும் என்பதுடன், அங்குள்ள தெரிந்தவர்கள் மிகவும் பரிச்சயமானவர்களாக இருக்கலாம் ஆகையினால், இது தொழில்சார் சுயதீர்ப்பு மற்றும் தொழில்சார் நடத்தையை பாதிக்கும்.
   - **நெறிமுறை தாக்கம்:** கணக்காய்வில் தீர்மானங்கள் அல்லது கண்டறிதல்கள் உண்மைகளை விட தனிப்பட்ட உறவுகளால் பாதிக்கப்படலாம் ஆகையால் இது நாணயத்தன்மை, பக்கச்சார்பின்மை மற்றும் தொழில்சார் ஐயநிலை ஆகிய கோட்பாடுகள் மீது தாக்கம் செலுத்தலாம்.

*(06 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b)**

**1. கணக்காய்வு நிறுவனத்திற்குள் கடமைகளைப் பிரித்தல்**

- RF ஹோட்டல் (பிரைவேட்) லிமிடெட்டின் அகக் கணக்காய்வை நடாத்துவதற்கு வேறு ஒரு பங்காளர் அல்லது கணக்காய்வுக் குழுவை (குமாரவைத் தவிர) நியமித்தல். இதனால் குமாரவை வாடிக்கையாளர் உறவிலிருந்து தூர விலக்கவும்.

**2. ஆளுகைக்கு உட்பட்டவர்களுக்கு வெளிப்படுத்துதல்**

- விராஜுடனான குமாரவின் வணிக உறவின் (சுற்றுலா போக்குவரத்து சேவை) தன்மையை சுகு ஹோட்டலின் கணக்காய்வுக் குழு அல்லது இயக்குநர்கள் சபையிடம் முழுமையாக வெளிப்படுத்துதல், இதனால் அவர்கள் சாத்தியமான அக்கறை முரண்பாட்டினை மதிப்பிட முடியும்.

**3. சுயாதீன மீளாய்வு அல்லது தரக் கட்டுப்பாடு**

- அகக் கணக்காய்வுப் பணி மற்றும் அறிக்கைகளை மதிப்பாய்வு செய்ய, குறிப்பாக முகாமையினால் செல்வாக்கு செலுத்தப்படும் எந்தவொரு பகுதி தொடர்பிலும் (உ-ம்., கட்டண அதிகரிப்பு) ஒரு சுயாதீன பங்காளரை (கணக்காய்வு அல்லது வணிக உறவில் ஈடுபடாத) ஏற்பாடு செய்தல்.

**4. கணக்காய்வு அல்லாத வணிக பரிவர்த்தனைகளைக் கட்டுப்படுத்துதல்**

- கணக்காய்வுப் பங்காளர்கள் சேவைபெறுனர் முகாமையுடன் வெளிவாரி வணிக உறவுகளில் நுழைவதையோ அல்லது வாடிக்கையாளர் பரிந்துரைகள் மூலம் தனிப்பட்ட நிதி நன்மைகளைப் பெறுவதையோ தடைசெய்யும் கொள்கையை றுயு பங்காளர்கள் செயற்படுத்த வேண்டும்.

**நிறுவன மட்டத்திலான பாதுகாப்புகள்**

- அடிப்படைக் போட்பாடுகளுடனான இணக்கப்பாட்டிற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நிறுவனத் தலைமை.
- உறுதிப்பாடு வழங்கல் அணியின் உறுப்பினர்கள் பொது நலனுக்காக செயற்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பை நிறுவும் நிறுவனத் தலைமை.
- பணிக்கமர்த்தல்களின் தரக் கட்டுப்பாட்டை செயற்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்குமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.
- அடிப்படைக் கோட்பாடுகளுடனான இணக்கப்பாட்டிற்கான அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல், அந்த அச்சுறுத்தல்களின் முக்கியத்துவத்தை மதிப்பிடுதல் மற்றும் அச்சுறுத்தல்களை அகற்ற அல்லது குறைக்க பாதுகாப்புகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் தேவை குறித்த ஆவணப்படுத்தப்பட்ட கொள்கைகள்.
- அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கவதற்கான ஆவணப்படுத்தப்பட்ட அகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.
- நிறுவனம் அல்லது பணிக்கமர்த்தல் அணி உறுப்பினர்கள் மற்றும் சேவை பெறுனர்களிடையேயான அக்கறைகள் அல்லது உறவுகளை அடையாளம் காண உதவும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.
- ஒரு சேவை பெறுனரிடமிருந்து பெறப்பட்ட வருவாயின் மீதான நம்பகத்தன்மையைக் கண்காணித்து, தேவைப்பட்டால், நிர்வகிப்பதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.
- ஒரு உறுதிப்பாட்டு சேவை பெறுனருக்கு உறுதிப்பாடல்லாத சேவைகளை வழங்குவதற்காக தனித்தனி அறிக்கையிடல் வரிசைகளுடன் வெவ்வேறு பங்காளர்கள் மற்றும் பணிக்கமர்த்தல் அணிகளைப் பயன்படுத்துதல்.
- ஒரு பணிக்கமர்த்தல் அணியின் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள் பணிக்கமர்த்தலின்

முடிவைப் பொருத்தமற்ற முறையில் பாதிப்பதைத் தடை செய்வதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

*(நான்கு பாதுகாப்புகளை அடையாளம் காண எதிர்பார்க்கலாம்)*

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***பகுதி B முடிவு***

SRI LANKA

(மொத்தம் 50 புள்ளிகள்) **பகுதி – C**

## *வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

*அத்தியாயம் 03*

**(a)**

**1. கட்டுப்பாட்டு சூழல்**

இது நிறுவனத்தின் உச்ச தொனியை அமைப்பதுடன், அகக் கட்டுப்பாட்டின் ஏனைய அனைத்து கூறுகளுக்குமான அடித்தளத்தை உருவாக்குகிறது. இது நெறிமுறை மதிப்புகள், முகாமைத் தத்துவம், நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதிகாரம் மற்றும் பொறுப்பு ஒதுக்கீடு போன்ற கூறுகளை உள்ளடக்கும்.

**2. இடர் மதிப்பீடு**

இடர் மதிப்பீடு என்பது குறிக்கோள்களை அடைவதை பாதிக்கக்கூடிய இடர்களை அடையாளம் கண்டு பகுப்பாய்வு செய்வதை உள்ளடக்கியது. இது சாத்தியமான அச்சுறுத்தல்களை எதிர்பார்க்கவும், அந்த இடர்களைக் குறைக்க பயனுறுதிமிக்க கட்டுப்பாடுகளை செயற்படுத்தவும் முகாமையை அனுமதிக்கிறது.

**3. கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்**

இவை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்ற வடிவமைக்கப்பட்ட அகக் கட்டுப்பாடுகள் ஆகும். பொதுவாக, கணக்காய்வுக்கு பொருத்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்வருவனவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளாக வகைப்படுத்தப்படலாம்:

- கடமைகளைப் பிரித்தல்
- பௌதீகக் கட்டுப்பாடுகள்
- அங்கீகாரம் மற்றும் ஒப்புதல்
- முகாமைக் கட்டுப்பாடுகள்
- மேற்பார்வைக் கட்டுப்பாடுகள்
- ஒழுங்கமைத்தல் கட்டுப்பாடுகள்
- எண்கணித மற்றும் கணக்கியல் கட்டுப்பாடுகள்
- நபர்சார் கட்டுப்பாடுகள்

**4. தகவல் மற்றும் தொடர்பாடல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் என்பது நிறுவனத்தின் செயற்பாடுகளை நடத்த, நிர்வகிக்க மற்றும் கட்டுப்படுத்த தேவையான தகவல்களைப் பிடித்து பரிமாறிக்கொள்ளும் செயன்முறையாகும். எனவே, அகக் கட்டுப்பாட்டின் தகவல் மற்றும் தொடர்பாடல் கூறு முகாமையின் நோக்கங்களை அடைவதற்கு அவசியமான முன்நிபந்தனையாகும். பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ள, முகாமையாளர்கள் சரியான நேரத்தில், நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை அணுக வேண்டும்.

**5. கண்காணிப்பு**

இது அகக் கட்டுப்பாட்டின் தரத்தை மதிப்பிடுவதைக் குறிக்கிறது. கண்காணிப்பு நடவடிக்கைகள் ஒரு நிறுவனம் அதன் இலக்குகளை அடைவதை கடினமாக்கும்

கட்டுப்பாட்டு முறைமையில் சாத்தியமான மற்றும் உண்மையான முறிவுகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றன. அகக் கட்டுப்பாடுகளைக் கண்காணிக்கும் பொறுப்பு நிறுவனத்தின் இயக்குநர்கள் சபையிடம் உள்ளது.

*(இரண்டு கூறுகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*
***(04 புள்ளிகள்)***

**(b)**

**(i)**

(I) ஒப்புதல் இல்லாமல் கைரேகைத் தரவை கைமுறையாகத் திருத்துதல்

(II) கடமைப் பிரிப்பின்மை - வருகை மற்றும் முன்பணம் இரண்டையும் கமல் கையாளுதல், காசாளர் பணி மற்றும் சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் இரண்டையும் அஜித் மேற்கொள்ளல்.

(III) முறையான முறைமை சார்ந்த பதிவுகள் இல்லாமல் முன்பணமாக காசு செலுத்தப்பட்டது

(IV) சில்லறை பணக் கொடுப்பனவுகளுக்காக விற்பனையினால் பெறப்பட்ட காசு பயன்படுத்தப்படல்

(V) சம்பளத் தாள்களில் சீராக்கம் ஒப்புதல் இல்லாமல் கைமுறையாக செய்யப்பட்டது.

*(நான்கு பலவீனங்களை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*
***(04 புள்ளிகள்)***

**(ii)**

(I) கைரேகை வருகைப் பதிவேடுகளில் செய்யப்படும் எந்த மாற்றங்களுக்கும் **ஆவணப்படுத்தப்பட்ட மேற்பார்வையாளர் அல்லது மேலாளரின் ஒப்புதல் அவசியம்.**

(II) பதிவு வைத்தல் மற்றும் பணம் கையாளுதல் இரண்டிலும் யாருக்கும் முழு கட்டுப்பாடு இல்லாதபடி **கடமைகள் தனியாக்கப்படுதல்**.

(III) பாதுகாப்பான ஊதியம் அல்லது மனிதவள முறைமையில், ஒப்புதல்கள் மற்றும் பெறுவனவுகளுடன் **அனைத்து ஊழியர் முன்பணங்களையும் தன்னியக்கமாக்கி பதிவு செய்தல்.**

(IV) **அனைத்து தினசரி விற்பனைப் பெறுவனவுகளும் அவ்வாறே வங்கியில் வைப்பிடப்படுவதை உறுதிசெய்து**, அங்கீகரிக்கப்பட்ட வழிகள் மூலம் மட்டுமே சில்லறைக் காசு மீள நிரப்பப்படுதல்.

(V) **சம்பளத் தாள்களை சரிசெய்ய முறையான ஒப்புதல் பெறப்பட வேண்டும்**

*(நான்கு பரிந்துரைகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*
***(04 புள்ளிகள்)***

**(c)** பின்வரும் காரணங்களால் அகக் கட்டுப்பாடுகளில் உள்ளமைந்த வரையறைகள் காணப்படுகின்றன:

- கட்டுப்பாடுகள் நன்கு வடிவமைக்கப்படாமல் இருக்கலாம்.
- தேவைக்கேற்ப கட்டுப்பாடுகள் செயற்படுத்தப்படாமல் இருக்கலாம். எனவே நன்கு வடிவமைக்கப்பட்ட கட்டுப்பாடு கூட அதன் நோக்கங்களை அடைய முடியாமல் போகலாம்.
- தொழிற்பாட்டு இடர்களில் தொடர்ச்சியான மாற்றங்கள். முன்னரே வடிவமைக்கப்பட்ட கட்டுப்பாடுகள் இதனால புதிய இடர்களை நிவர்த்தி செய்யத் தோல்வியடையக்கூடும்.
- கட்டுப்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்துவதற்கான செலவு அந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து வழங்கப்படும் நன்மைகளை நியாயப்படுத்தாதிருக்கலாம்.
- நிறுவனத்திற்குள் காணப்படத்தக்க மோசமான இடர் விழிப்புணர்வு கலாச்சாரம்.

எனவே, LGPL நிறுவனத்திற்குள் முற்றிலும் பிழை இல்லாத கட்டுப்பாடுகளை எதிர்பார்க்க முடியாது.

***(04 புள்ளிகள்)***

**(d)**

| படிமுறை | நோக்கம் |
|---|---|
| வருகைப் பதிவு செய்தல் | ○ ஊழியர்களுக்கு உண்மையில் செய்யப்படும் வேலை அல்லது வருகை தந்த நாட்களுக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்படுதல் |
| ஊதியக் கணித்தல் | ○ உண்மையான ஊழியர்களுக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்படுதல், போலி ஊழியர்கள் இல்லை<br>○ ஊழியர்களுக்கு சரியான விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுதல்.<br>○ கழிப்பனவுகள் துல்லியமாகக் கருத்திற்கொள்ளப்படல் |
| திருத்தங்கள் | ○ சரியான ஊழியருக்கு துல்லியமாக புதுப்பிக்கப்படுதல். |
| கொடுப்பனவுகள் | ○ சரியான தொகைகள் ஊழியர்களுக்கும் வரி அதிகாரசபைகள் மற்றும் சேமலாப நிதிகள் போன்ற பிற அதிகாரசபைகளுக்கும் செலுத்தப்படுதல்<br>○ சரியான நேரத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல்<br>○ சரியான ஊழியருக்கு பணம் செலுத்தப்படுதல் |
| பதிவு செய்தல் | ○ ஊதியம் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளும் சரியான காலத்திலும் சரியான கணக்குகளிலும் துல்லியமாக பதிவு செய்யப்படுதல் |

*(மூன்று நோக்கங்களை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

***(03 புள்ளிகள்)***

**(e)**

| பிரயோகக் கட்டுப்பாடு | உதாரணம் |
|---|---|
| 1. உள்ளீட்டு முழுமையின் மீதான கட்டுப்பாடுகள் | • கட்டுப்பாட்டு மொத்தங்களின் கைமூல மற்றும் நிகழ்ச்சித்திட்ட இணக்கம்<br>• ஆவண எண்ணிக்கை<br>• மூல ஆவணங்களுக்கான பதப்படுத்தப்பட்ட வெளியீட்டை ஒன்றுக்கு ஒன்று சரிபார்த்தல்<br>• ஒரு உள்ளீட்டின் திட்டமிடப்பட்ட பொருத்தம் எதிர்பார்க்கப்படும் உள்ளீட்டுக் கட்டுப்பாட்டுக் கோப்பு<br>• நிராகரிக்கப்பட்ட உருப்படிகளை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான நடைமுறைகள் |
| 2. உள்ளீட்டு துல்லியத்தின் மீதான கட்டுப்பாடுகள் | • உள்ளீட்டு பரிவர்த்தனையில் நம்பகத்தன்மைக்காக தரவு புலங்களை (உதாரணமாக, பெறுமதி, குறிப்பு எண், திகதி) சரிபார்க்கும் திட்டங்கள்.<br>• எண்ணியல் உறுதிப்படுத்தல்<br>  ○ நியாயமானதன்மை சோதனை<br>  ○ எண்தான சோதனை<br>  ○ உள்ளதாம்தன்மை சோதனை<br>  ○ அவசியமான தகவல்<br>  ○ அனுமதிக்கப்பட்ட வரம்பு<br>• வெளியீட்டின் கையேடு ஆய்வு மற்றும் மூலத்துடனான இணக்கப்படுத்தல்<br>• கட்டுப்பாட்டு மொத்தங்களின் இணக்கம் |
| 3. உள்ளீட்டு அங்கீகாரத்தின் | • தகவல் உள்ளீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதற்கான கைமூல சோதனைகள் |

| | |
|---|---|
| மீதான கட்டுப்பாடுகள் | • அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களால் உள்ளீடு |
| 4. செயலாக்கத்தின் மீதான கட்டுப்பாடுகள் | • உள்ளீடு முடிந்ததும் உள்ளீட்டிற்கு ஒத்த கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். (உ-ம்., தொகுதி இணக்கப்படுத்தல்)<br>• செயலாக்கம் முடிவதற்கு முன்பு மக்கள் வெளியேறுவதைத் திரை எச்சரிக்கைகள் தடுக்கலாம் |
| 5. முதன்மை கோப்புகள் மற்றும் நிலையான தரவு மீதான கட்டுப்பாடுகள் | • ஒன்றுக்கு ஒன்று சரிபார்ப்பு<br>• அனைத்து முதன்மை கோப்புகள் மற்றும் நிலையான தரவுகளின் சுழற்சி மதிப்பாய்வுகள்<br>• நீக்கங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்த முதன்மை கோப்புகளைப் பயன்படுத்தும்போது பதிவு எண்ணிக்கைகள் (செயற்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை) மற்றும் திரட்டு மொத்தங்கள் (உதாரணமாக, அனைத்து ஊதிய எண்களின் மொத்தம்)<br>• தற்போதைய மீதி இல்லாத கணக்குகளை நீக்குவதற்கான கட்டுப்பாடுகள் |

*(மூன்று நோக்கஙகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

## *வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 மற்றும் 06***

**(a)**

- **வருமான ஏற்பிசைவு**
  - வெவ்வேறு தளங்களிலிருந்தான (உள்ளக, OPD, மருந்தகம்) பாரிய வருமானங்கள்.
  - ஊநுழுவின் வெகுமதிக் கொடுப்பனவு வருமானத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் ஏற்படும் வருமான மிகைப்படுத்தல் இடர்.

- **சம்பளம் மற்றும் மருத்துவர் கட்டணங்கள்**
  - இவை இணைந்த வகையில் வருமானத்தில் 20% ஐ விட அதிகமாக உள்ளது. இது இலாப எல்லையைப் பாதிக்கலாம். தவறான வகைப்படுத்தல் அல்லது குறைத்து மதிப்பிடுவதற்கான இடர் உள்ளது.
- **உறவுமுறைத் தரப்பினர் பரிவர்த்தனை**
  - தாய் நிறுவனத்திற்கு வழங்கப்படும் கடனுக்கு (ரூ. 5 மில்லியன்) சரியான வெளிப்பாடு மற்றும் நியாயமான முன்னிலைப்படுத்தல் அவசியம்.

- **இலாப எல்லைகளின் வீழ்ச்சி**
  - அவை தொழிற்பாட்டு நெருக்கடிகள், அதிகரித்த செலவுகள் அல்லது சாத்தியமான பிறழ்கூற்றுக்கள் போன்றவற்றில் எதனால் ஏற்பட்டது என்பதை தீர்மானிக்க பகுப்பாய்வு அவசியம்.

***(04 புள்ளிகள்)***

**(b)**

| கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயம் | |
|---|---|
| பணிக்கமர்த்தலின் பண்புகள் | • நிதி அறிக்கையிடல் சட்டகம்<br>• தொழிற்துறை பிரத்தியேக அறிக்கையிடல் தேவைப்பாடுகள்<br>• எதிர்பார்க்கப்படும் கணக்காய்வு உள்ளடக்கம் (உ-ம். அமைவிடங்களின் எண்ணிக்கை)<br>• கட்டுப்பாட்டு உறவுமுறைகளின் தன்மை (உ-ம். குழு கணக்காய்வுகள்)<br>• வணிகப் பிரிவுகளின் தன்மை<br>• பயன்படுத்த வேண்டிய அறிக்கையிடல் நாணய அலகு<br>• அகக் கணக்காய்வுப் பணியின் கிடைப்பனவு<br>• சேவை நிறுவனங்களின் பயன்பாடு (வணிக செயன்முறை புறவழங்கல்) மற்றும் அவர்கள் கட்டுப்பாடுகளை வடிவமைத்துள்ள முறை<br>• முந்தைய கணக்காய்வுகளிலிருந்து பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகள்<br>• கணக்காய்வு நடைமுறைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் விளைவு<br>• வாடிக்கையாளர் தனிப்பட்ட மற்றும் தரவுகளின் கிடைக்கும் தன்மை |
| அறிக்கையிடல் நோக்கங்கள், கணக்காய்வுயின் நேரகாலம் மற்றும் தொடர்பாடல்களின் தன்மை | • அறிக்கையிடலுக்கான நிறுவனத்தின் கால அட்டவணை<br>• முகாமை மற்றும் ஆளுகைப் பொறுப்பில் உள்ளவர்களுடனான சந்திப்பு ஒழுங்கமைத்தல்கள்<br>• எதிர்பார்க்கப்படும் வகைகள் மற்றும் அறிக்கைகளின் நேரம் குறித்து முகாமை மற்றும் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுடன் கலந்துரையாடல்கள்<br>• கணக்காய்வுயின் நிலை குறித்து பணிக்கமர்த்தல் முழுதும் எதிர்பார்க்கப்படும் தகவல் தொடர்பாடல்<br>• கூறு கணக்காய்வாளர்களுடன் எதிர்பார்க்கப்படும் தொடர்பாடல்<br>• மூன்றாம் தரப்பினருடனான தொடர்பாடல் |
| முக்கிய காரணிகள், முதன்முறைப் பணிக்கமர்த்தல் நடவடிக்கைகள் மற்றும் பிற பணிக்கமர்த்தல்களில் பெறப்பட்ட அறிவு | • பொருண்மையைத் தீர்மானித்தல்<br>• ஒட்டுமொத்த நிதி அறிக்கை மட்டத்தில் பொருண்மைமிக்க பிறழ்கூற்று இடர் அதிகமான இடங்களில் அதன் தாக்கத்துடன் அடையாளம் காணப்பட்ட பகுதிகளை அடையாளம் காணுதல்<br>• முந்தைய கணக்காய்வுகளின் முடிவுகள்<br>• தொழில்சார் சந்தேகத்தை பராமரிக்க வேண்டிய அவசியம்<br>• வடிவமைப்பு, செயற்படுத்தல் மற்றும் நல்ல அகக் கட்டுப்பாட்டை பராமரிப்பதில் முகாமையின் அர்ப்பணிப்புக்கான சான்றுகள்<br>• பரிவர்த்தனைகளின் அளவு<br>• முக்கிய வணிக விருத்திகள்<br>• முக்கிய தொழிற்துறை விருத்திகள்<br>• நிதி அறிக்கையிடல் சட்டகத்திலான கணிசமான மாற்றங்கள்<br>• பிற முக்கிய சமீபத்திய விருத்திகள் |
| வளங்களின் இயல்பு, | • பணிக்கமர்த்தல் அணியின் தேர்வு |

| | |
|---|---|
| நேரம் மற்றும் அளவு | • அணி உறுப்பினர்களுக்கான வேலை ஒதுக்கீடு<br>• பணிக்கமர்த்தல் பாதீடு |

*(மூன்று விடயங்களை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*
***(06 புள்ளிகள்)***

**(c)**

**தொழிற்துறை, ஒழுங்குமுறை மற்றும் வெளிவாரிக் காரணிகள்**

- சுகாதாரப் பராமரிப்பு விதிமுறைகள், விலை நிர்ணயக் கட்டுப்பாடுகள் மற்றும் காப்புறுதி நடைமுறைகள்.

**நிறுவனத்தின் தன்மை**

- அதன் செயற்பாடுகள், வழங்கப்படும் சேவைகள் (உ-ம்., மகப்பேறு பராமரிப்பு, குழந்தை மருத்துவ சேவைகள்), அளவு மற்றும் உரிமை மற்றும் ஆளுகைக் கட்டமைப்பு.

**அகக் கட்டுப்பாட்டு முறைமை**

- நுசீ பயன்பாடு, கடமைகளைப் பிரித்தல் மற்றும் பட்டியலிடல், ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளுக்கான ஒப்புதல் செயன்முறைகள். குறிப்பாக அகக் கணக்காய்வாளரால் அறிக்கையிடப்பட்ட விடயங்களுக்கான கட்டுப்பாடுகளை செயற்படுத்தல்.

**நிதி செயற்திறன் மற்றும் இலாபத்தன்மை**

- வருமானம், செலவுகள், எல்லை மாற்றங்கள் மற்றும் முக்கிய நிதி குறிகாட்டிகளின் போக்குகள்.

**நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் மற்றும் தொடர்புடைய வணிக இடர்கள்**

**நிறுவனம் கணக்கியல் கொள்கைகளின் தெரிவு மற்றும் பயன்பாடு, அவற்றின் பொருத்தப்பாடு மற்றும் வணிகம் மற்றும் தொழிற்துறை நிலைத்தன்மை உள்ளடங்கலாக.**

**நிறுவனத்தின் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்க, அது செய்துள்ள முக்கிய ஒப்பந்தங்கள்**

aat SRI LANKA

*(நான்கு பகுதிகளை மட்டும் எதிர்பார்க்கலாம்)*
***(04 புள்ளிகள்)***

**(d)**

- சேவைபெறுனரது பெயர்
- வேலைத்தாளின் விடயம், நோக்கம் அல்லது உள்ளடக்கம்
- ஐந்தொகைத் திகதி
- தயாரிக்கப்பட்ட திகதி
- வேலைத்தாள் குறிப்பு இலக்கம்
- தயாரித்த ஊழியரது ஒப்பம்
- மீளாய்வு செய்தவரின் ஒப்பம்
- மீளாய்வுத் திகதி
- கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதன் மூலம் ஏதேனும் மாற்றங்கள் உள்ளிட்ட திட்டமிடல் செயன்முறையின் சான்றுகள்.
- அகக் கணக்காய்வின் பணி மற்றும் எட்டப்பட்ட முடிவுகளை கணக்காய்வாளர்கள் பரிசீலித்ததற்கான சான்றுகள்.
- பரிவர்த்தனைகள் மற்றும் இருப்புகளின் பகுப்பாய்வு
- முக்கிய விகிதங்கள் மற்றும் போக்குகளின் பகுப்பாய்வு
- பொருண்மைமிக்க பிறழ்கூற்றுகளின் அடையாளம் காணப்பட்ட மற்றும் மதிப்பிடப்பட்ட

இடர்.

- கணக்காய்வு நடைமுறைகளின் தன்மை, நேரம், நீட்டிப்பு மற்றும் முடிவுகளின் பதிவு.
- நிகழ்த்தப்பட்ட பணி மேற்பார்வையிடப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டதற்கான சான்று
- கணக்காய்வு நடைமுறைகளை யார் செய்தார்கள், அவை எப்போது செய்யப்பட்டன என்பதற்கான குறிகாட்டி
- மற்றொரு கணக்காய்வாளரால் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படும் கூறுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் கணக்காய்வு நடைமுறைகளின் விபரங்கள்.
- நிறுவனம் மற்றும் அதன் சூழலைப் புரிந்துகொள்வதில் பெறப்பட்ட தகவல்கள்.

*(ஐந்து உருப்படிகளை மட்டுமே எதிர்பார்க்கலாம்)*

***(05 புள்ளிகள்)***

**(e)**

**(i)** **பரிசோதனை**

**வரைவிலக்கணம்:** பதிவுகள் அல்லது பௌதீக சொத்துக்களை ஆய்வு செய்தல்.

**உதாரணங்கள்:**

1. துல்லியமான பட்டியலிடலைச் சரிபார்க்க, உட்புற நோயாளி வருமானத்துக்கான மாதிரிக்கான விலைப்பட்டியல்கள் மற்றும் வெளியேற்ல்சுருக்கங்களை ஆய்வு செய்தல்.
2. சம்பள விவரங்களை உறுதிப்படுத்த மனிதவனக் கோப்புகள் மற்றும் மருத்துவர் ஒப்பந்தங்கள் போன்றவற்றை ஆய்வு செய்தல்.
3. வங்கிக் கூற்றுக்களை ஆய்வு செய்தல்.
4. கடன் ஒப்பந்தங்களை ஆய்வு செய்தல்.
5. ஒரு நிலத்தின் உரிமைப் பத்திரத்தை ஆய்வு செய்தல்.

**(ii)** **பகுப்பாய்வு நடைமுறைகள்**

**வரைவிலக்கணம்:** நிதி மற்றும் நிதி அல்லாத தரவுகளுக்கு இடையேயான நம்பத்தகுந்த உறவுகளைக் கற்பதன் மூலம் நிதித் தகவலை மதிப்பீடு செய்தல்.

**உதாரணங்கள்:**

1. அசாதாரண போக்குகளை அடையாளம் காண, தலா படுக்கைக்கான நடப்பு ஆண்டு வருவாயை முந்தைய ஆண்டு மற்றும் தொழிற்துறை சராசரிகளுடன் ஒப்பிடல்
2. இலாபத்தன்மை வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய விகித பகுப்பாய்வை (உ-ம்., சம்பளம்∴வருவாய், இலாப எல்லை) மேற்கொள்ளவும்.
3. பாதீடுகள் மற்றும் முன்னறிவிப்புகள் போன்ற எதிர்பார்க்கப்படும் முடிவுகள்.

*(ஒவ்வொன்றிற்கும் இரண்டு எடுத்துக்காட்டுகளை மட்டும் எதிர்பார்க்கலாம்)*

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

*பகுதி **C** முடிவு*

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the “Only” answers, or, for that matter even as “Model Answers”. The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

ள

*2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved.*
*No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*